ණය සහනදායක මණ්ඩලයීය දෙපාර්තමේන්තුව

கடன் இணக்க சபைத் திணைக்களம்

# DEPARTMENT OF DEBT CONCILIATION BOARD

වාර්ෂික වාර්තාව

ஆண்டு அறிக்கை

## Annual Report 2017

ණය සහනදායක මණ්ඩලයීය දෙපාර්තමේන්තුව

**கடன் இணக்கசபைத் திணைக்களம**

**DEPARTMENT OF DEBT CONCILIATION BOARD**

# ஆண்டு அறிக்கை - 2017

**கடன் இணக்க சபைத் திணைக்களம்**

இல. 35 ஏ, கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தை,

கொழும்பு 08

debtcociliation@gmail.com

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. பணி, நோக்கம், நோக்கு | 3 |
| 2. அறிமுகம் | 4 |
| 3. திணைக்களப் பணியாட்டொகுதி பற்றிய தகவல்கள் | 7 |
| 4. கடன் இணக்க சபையின ஆண்டு செயலாற்றுகை | 8 |

# கடன் இணக்கசபைத் திணைக்களம

**பணி**

அடைமானமொன்று, நிபந்தனையுடனான கைமாற்ற உறுதியொன்று அல்லது கடன் கொடுப்பல் வாங்கலொன்றுக்காகவே அறுதி உறுதிகள் சம்பந்தமாகப் பெற்றுக் கொண்ட கடன் தொகையொன்றுக்காக பிணையில் வைக்கப்பட்டுள்ள கமத்தொழில் அல்லது வீட்டாதனம் , காணிகள் ஆகிய அசைவற்ற ஆதனமொன்றை கடன் இணக்க முறையில் தவணைகளின் மூலம் குறைந்த வட்டி விகிதாசாரத்தில் செலுத்தி மீட்டுக் கொள்வதற்கு கடனாளிகளுக்குத் தேவையான சட்டப் பாதுகாப்பு மற்றும் நிவாரணங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் .

**நோக்கம்**

அசைவற்ற ஆதனம் சம்பந்தமாக அடைமானம், நிபந்தனையுடனான கைமாற்ற உறுதிகள் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கலொன்றுக்காகவே எழுதப்பட்ட அறுதி மற்றும் ஏனைய கடப்பாடுகளின் மீது அறவிட வேண்டிய கடன்கள் பற்றிய இணக்கத்திற்கு திறததவர்களைக் கொண்டு வருதல்.

**நோக்கு**

அசைவற்ற ஆதனம் சம்பந்தப்பட்ட கடன் கொடுக்கல் வாங்கல்களினால் அவதிப்பட்ட பொது மக்களுக்கு கடன் தொலலையிலிருந்து மீள்வதற்கு நிவாரண வழிமுறையொன்றை ஏற்படுத்திக் கொடுத்தல்.

# கடன் இணக்கசபைத் திணைக்களம்

**அறிமுகம் :**

காணிகள், வயல்கள், தோட்டங்கள், வீடுகள் போன்ற அசைவற்ற ஆதனங்களை நிபந்தனையுடனான அறுதி உறுதிகள் பிணையில் வைத்துக் கொண்ட கடன்கள் சம்பந்தமாக அல்லது அத்தகைய பாதுகாப்பான கடனுடன் வாக்குறுதிப்பத்திரங்கள், காசோலைகள் போன்ற ஆவணங்களின் மீது பெற்றுக் கொண்ட பாதுகாப்பற்ற கடன் சம்பந்தமாக கடன்பட்டுள்ள பொது மக்களை அக் கடன் தொல்லையிலிருந்து விடுவிப்பதற்காக ஏதேனுமொரு நிவாரண வழிமுறையொன்றை அறிமுகப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டு 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டததின் கீழ் இத் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக 1999 இல் செய்யப்பட்ட 29 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின்படி கடன் கொடுக்கல் வாங்கலொன்றுக்காகவே எழுதப்பட்ட அறுதி உறுதிகள் தொடர்பாக சபை தலையிட்டு நிவாரணங்களை ஏற்படுத்த முடிந்ததனால் இந் நிவாரண வழிமுறை மேலும் விரிவடைந்துள்ளது. இச் சபையின் செயற்பாட்டின் மூலம் கடன் கொடுத்தவர்களால் கடன்பட்டவர்கள் சுரண்டப்படுவதற்கு உள்ள சந்தர்ப்பங்கள் முடக்கப்படுகின்றன. சபையின் தலையாய நோக்கம் இது என்பதாயினும் கடன் கொடுத்தவர்களுக்கும் அநீதி ஏற்படுவதற்கு இடமளிக்காது. ஈட்டு உறுதிகளின் மீது மற்றும் நிபந்தனையுடனான அறுதி உறுதிகளின் மீது வைக்கப்பட்டுள்ள அசைவற்ற ஆதனங்கள் தொடர்பில் கடனாளிக்கு இலகுவானதும் கடன் கொடுத்தவர் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான நிபந்தனைகளின் மீது அவ்வாதனங்களை மீட்டுக் கொள்வதற்கு உதவியளித்தல் இச் சபையின் நோக்கமாகிறது. இச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்காக எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது என்பதுடன் சபையின் அலுவல்கள் முத்திரைக் கட்டணங்களின்றி நிறைவேற்றப்படுகின்றன. கசெற் மற்றும் அறிவித்தல் கட்டணங்களாக சிறு பணத் தொகையொன்று அறவிடப்படுவதனால் கடன் தொல்லைகளால் அவதிப்படுகின்ற மக்களுக்கு இதன் மூலம் கிடைக்கப் பெறுகின்ற சேவை அளப்பரியதாகும். அத்துடன் தன் சார்பில் சபையின் முன்னிலையில் சட்டத்தரணிகளை தோற்றுவிப்பது கட்டாயமானதல்ல.

கடன் இணக்க சபையானது, அமைச்சரால் நியமிக்கப்படுகின்ற 05 உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன், அதில் ஒருவர் சபையின் தவிசாளராக நியமிக்கப்படுவார்.

**சபையின் தவிசாளர்**

உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவராக அல்லது மாவட்ட நீதிபதி ஒருவராக நிரந்தர நியமனமொன்றை வகிக்கும் அல்லது வகித்த ஆளொருவராக அல்லது

இலங்கை குடியியல் சேவையின் 1ஆம் வகுப்பின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்ற அல்லது இருந்த மாவட்ட நீதிபதி ஒருவராக பதவியை வகிக்கின்ற அல்லது வகித்த ஆளொருவர் அல்லது

15 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தைக் கொண்டுள்ள உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவராக அல்லது மாவட்ட நீதிபதி ஒருவராக நிரந்தர நியமனமொன்றை வகிக்கும் அல்லது வகித்த ஆளொருவராக அல்லது

இலங்கை குடியியல் சேவையின் 1ஆம் வகுப்பின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்ற அல்லது இருந்த மாவட்ட நீதிபதி ஒருவராக நிரந்தர நியமனமொன்றை வகிக்கும் அல்லது வகித்த ஆளொருவராக அல்லது

இலங்கை குடியியல் சேவையின் 1ஆம் வகுப்பின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்ற அல்லது இருந்த மாவட்ட நீதிபதி ஒருவராக பதவியை வகிக்கின்ற அல்லது வகித்த ஆளொருவா் அல்லது

15 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தைக் கொண்டுள்ள உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞர் ஒருவர் அல்லது சட்டத்தரணி ஒருவராக இருக்க வேண்டு:ம்.

சபையின் ஏனைய 04 உறுப்பினர்களில்

ஆகக் குறைந்தது ஒருவராவது 15 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தைக் கொண்டுள்ள உயர் நீதிமன்றததின் வழக்குரைஞர் ஒருவர் அல்லது சட்டத்தரணி ஒருவராக இருக்க வேண்டும்.

**சபையின் ஏனைய 04 உறுப்பினர்களில்**

ஆகக் குறைந்தது ஒருவராவது 15 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தைக் கொண்டுள்ள உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞர் ஒருவர் அல்லது சட்டத்தரணி ஒருவராக இருக்க வேண்டும். மேலும் ஆகக் குறைந்தது ஒருவராவது இலங்கையின் வர்த்தக அல்லது வாணிப வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதும் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிப்பதற்கு அமைச்சரால் பரிந்துரைக்கப்பட்டதுமான ஒருவராக இருக்க வேண்டும். சபையின் தவிசாளர் மற்றும் ஏனைய சகல உறுப்பினர்களும் தமது நியமனத் திகதி தொடக்கம் மூன்று வருட காலப் பகுதிக்கு பதவியை வகிக்க வேண்டும்.

இச் சபையின் கடமை அலுவல்கள் சாதாரண நீதிமன்றமொன்றில் இடம்பெறுகின்ற தன்மையை விட மாறான தன்மையைக் கொண்டுள்ளது. சபையின் முன்னிலையில் செய்து கொள்ளப்படுகின்ற உடன்படிக்கைகள் திறத்தவர்கள் ஒருவருக்கொருவர் இணக்கத்துடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் தவிர சபையின் கட்டளைகளைச் செயல்படுத்துதல் அல்ல, அவ்வாறாயினும் நியாயமற்ற வட்டிகளைக் குறைப்பதற்கும் சபையினால் முன்வைக்கப்படுகின்ற நியாயமான முன்மொழிவுகளை கடன் கொடுத்தவர்கள் ஏற்றுக் கொள்ள்பபடாவிடின் அது தொடர்பாக கட்டளைச் சட்டத்தின் கீழ் கடனாளிகளுக்கு சான்றிதழொன்றை வழங்குவதற்கும் சபைக்குத் தத்துவங்கள் உள்ளன. அத்துடன் கடன் கொடுத்தவர் இறுதி விசாரணைக்காக வழங்கப்பட்ட அறிவித்தலின்படி விசாரணைக்கு சமூகமளிக்காவிடின், மறுகட்சியின்றி வழக்கு விசாரணையொன்றின் பின்னர் கடனாளிக்கு சான்றிதழொன்று வழங்கப்படுகிறது. ஆயினும் அவ்வாறு செய்யப்படுவது பதமிவு அஞ்சலில் அல்லது கிராம உத்தியோகத்தர் மூலம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு கடன் கொடுத்தவருக்கு அறிவித்து கடன் கொடுத்தவர் வேண்டுமென விசாரணைக்கு சமூகமளிப்பதை தவிர்த்துக் கொள்கிறார் எனச் சபை உணருமிடத்து மாத்திரமே இத்தகைய சந்தர்ப்பமொன்றில் அத்தகைய சான்றிதழொன்றை வழங்குவதனால் ஏற்படும் நன்மை கடனாளியைச் சேரும்.

வேறொரு நீதிமன்றத்தில் இது தொடர்பான விசாரணையொன்று நடைபெறும் சந்தர்ப்பத்தில் இச் சான்றிதழ் அந் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமாயின் கடன் தொகையை தீர்ப்பதற்காக ஆகக் கூடிய 10 வருட காலப் பகுதியொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கும், வட்டி ஆகக் குறைந்தது விகிதாசாரம் வரை குறைப்பதற்கும், வழக்குக் கட்டணங்கள் எதுவும் கடனாளியிடமிருந்து அறவிடப்படாதிருப்பதற்கும் கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு தத்துவங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

**திணைக்களப் பணியாட்டொகுதி பற்றிய தகவல்கள் பின்வருமாறு**

| **தொகுதி** | **அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை** | **தற்போதுள்ள எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | 01 (பதில்) | 01 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 | 02 | 01 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 09 | 06 | 03 |
| சுருக்கெழுத்தாளர் | 03 | 02 (தற்காலிக) | 03 |
| கா.கா.ச | 04 | 04 | 00 |
| சாரதி | 02 | 01 | 01 |
| மொத்தம் | 21 | 16 | 08 |

**2017.01.01 முதல் 2017.12.31 வரை கடன் இணக்க சபையின்**
**செயலாற்றுகை பற்றிய தகவல்கள் பின்வருமாறு**

| | 2017.01.01 | 2017.12.31 |
|---|---|---|
| முன்கொணரப்பட்ட முடிவடையாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 825 | |
| புதிய விண்ணப்பங்கள் | 372 | |
| கிடைக்கப் பெற்ற மீளாய்வு விண்ணப்பங்கள் | 36 | |
| மொத்த விண்ணப்பங்கள் | | 1233 |
| முடித்துக் கொண்ட விண்ணப்பங்கள் | 147 | |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | 167 | |
| மீளாய்வு விண்ணப்பங்கள் | 50 | |
| புறம் வைத்தல் விண்ணப்பங்கள் | 00 | |
| நிரலிலிருந்து நீக்கப்பட்ட விண்ணப்ப்ங்க்ள | 00 | |
| சான்றிதழ்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் | 09 | |
| வாபஸ் பெற்ற விண்ணப்பங்கள் | 31 | |
| மொத்தம் | | 404 |
| ஆண்டின் இறுதியில் முடிவடையாமல் எஞ்சியுள்ள விண்ணப்பங்கள் | | **829** |
| மொத்தம் | | |

**2017 ஆம் ஆண்டின் திணைக்களத்தின் செலவினங்களின் செயலாற்றுகை**

| | **மதிப்பீட்டுத் தொகை** | **செலவினம்** | **நூற்றுவீதம்** |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 18468000.00 | 15672245.99 | 84.86% |
| மூலதனச் செலவினம் | 850000.00 | 734125.09 | 86.37% |
| மொத்தம் | 19318000.00 | 16406371.08 | 84.93% |

ණය සහනදායක මණ්ඩලයීය දෙපාර්තමේන්තුව
අංක 35ඒ, ආචාර්ය එන්.ඒ. පෙරේරා මාවත, කොළඹ 08.

கடன் இணக்க சபைத் திணைக்களம்
இல. 35 ஏ, கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08

Department of Debt Conciliation Board
No 35A, Dr N.M Perera Mawatha, Colombo 08.